

# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"

FOR PRIVATE CIRCULATION ONLY

குரல்: 3 யாழ்ப்பாணம் பெப்ரவரி 1997

## எருசலேமே எழுந்திரு

**ஆசிரியர் உரை.**

யூபிலி ஆண்டை வரவேற்க, இன்னும் மூன்று வருடங்கள் இருக்கின்றன. வரவேற்பு ஆயத்தங்களும் எடுக்கப்படுகின்றன. 2000 ஆண்டை நோக்கி யாத்திரை செய்யும் திருச்சபை ஓர் சங்கடத்துக்குள்ளானது போல தத்தளிக்கின்றது.

யூபிலி ஆண்டுக்கான முதல் ஆயத்த உரைகளில் யூபிலி என்றால் என்ன என்ற விளக்கத்தைத் தெரிந்து கொண்டோம்

அடுத்து எம் தலத்திருச்சபையின் (யாழ் திருச்சபை) வரலாற்றை பின்நோக்கிப் பார்த்து, நடந்து நன்மைகட்கு நன்றியும், தீமைகளுக்கு மன்னிப்பு ஒப்புரவும் செய்தலை, தலையாய கடமையாகக் கொள்ளல் வேண்டும் என்ற பாப்பரசரின் வேண்டுதலுக்கிணங்கி வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பல கேள்விகள் எழுகின்றன.

- திருச்சபை அழிவுறுகிறதா?
- அதன் குருக்களில் சிலர் தகுதி குன்றி விட்டனரா?
- அதன் அமைப்புகளின் உத்வேகம் தணிந்து விட்டதா?
- எல்லா சமயங்களையும் உலுப்பிவிட்ட இப்பயங்கரப் போர், நம் திருச்சபையையும் ஆட்டம் கொடுக்க வைத்து விட்டதா?

'பின் பிரம்பு போன்ற ஓர் அளவு கோல் என்னிடம் கொடுக்கப்பட்டது, எழுந்து கடவுளின் கோவிலையும் பலி பீடத்தையும் அளவிடு. அங்கு வழிபடுவோரையும் கணக்கிடு என்ற குரல் கேட்டது' (திருவெளி 11:1)

நம்மை இறைவன் சந்தித்து கணக்கிடும் நாட்கள் இவை. இவை சோதனையின் காலம். யேசுவின் ஆவி, நம்மை இனங்கண்டுகொள்ளும் காலம் இது.

திருச்சபையினுள்ளே பல குழப்பங்கள், முரண்பாடுகள் தோன்றும். இதனூடாக உண்மை வெளியாகும். உண்மை விசுவாசி, ''வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு, இலைகள் என்றும் உதிர்க்காமல் தக்க பருவத்தில் கனிதரும் மரத்துக்கு ஒப்பாவான்' (சங் 1 : 3)

"கோவிலுக்கு வெளியே உள்ள முற்றத்தையோ அளக்காமல் விட்டுவிடு, ஏனெனில் அது வேற்றினத்தாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. திருநகரை அவர்கள் 42 மாதம் மிதித்துச் சீரழிப்பார்கள்."
(திருவெளி 11 : 1)

திருச்சபையின் வெளிமுற்றத்தில் உள்ளவர் பலர். திருவிழா, ஆடம்பரம், வெளி சம்பிரதாய ஆசாபாசங்களுக்காக வாழும் பொது நிலையினரும் குருகுலமும். இவர்கள் மத்தியில்தான் இக்குழப்பங்கள் தோன்றி, பெரும் பிரச்சினைகளை உருவாக்கும் இதை உயர் நீதியரசர் W. T A லெஸ்லி பெர்னான்டோ அவர்களின். (1997-1-26 ஞாயிறு ஒப்சேவர்) கட்டுரை உறுதிப்படுத்தும்.

இவ் அவவிசுவாச சூறாவளியின் பேரழிவின் மத்தியில் ''என் சாட்சிகள் இருவரை அனுப்புவேன்'' என்கிறது திருமறை
(திருவெளி 11 : 3)

இவர்கள் யார்?

கத்தோலிக்கரைப் பொறுத்தவரை, இவர்கள் வேறுயாருமல்ல தேவதாயும் பாப்பரசரும்தான்.

தேவதாய்க்கு எதிரானவர்கள் திருச்சபைக்கு வெளியேயும் உள்ளேயும் உண்டு.

முன்பு, கனாத் ஒபயசேகரா, "இலங்கையில் பத்தினி வழிபாடு" என்ற நூலில், தேவதாய் பற்றிய சில பந்திகளை கொச்சைப்படுத்தி எழுதியிருந்தார். இதை
( 2 ம் பக்கம் பார்க்க )

## திஸ்ஸா பாலசூரியா எழுதிய "மரியாளும் மானிட விடுதலையும்"

இந்நூல் 1992 ம் ஆண்டு கொழும்பில் பிரசுரிக்கப்பட்டது. நூலின் ஆரம்பத்தில் ஆசிரியர் குறிப்பிடும் நோக்கம் வரவேற்கத்தக்கது. தேவதாயின் பக்தியை இன்றைய உலகுக்குப் பொருத்தமுள்ளதாக்கி, 2000 ஆண்டுத் துன்பங்களுக்கு அர்த்தமுள்ளதாக்கி, ஏனைய மதங்களுடனான உரையாடலுக்கு வழி கோலுவதே ஆசிரியரின் நோக்கமாகும்.

ஆனால் இந்நோக்கை நிறைவேற்ற, அவர் எடுத்தாண்ட வழிகள் சறுக்கலானவை; கோணலானவை இதனால் அவர் செய்ய எண்ணிய நன்மைகளைவிட தீமைகளையே அதிகம் தோற்றுவித்துள்ளது.

இந் நூலில் ஏழு அதிகாரங்கள் உள.

1) சிங்கள கத்தோலிக்க மரியன்னை பக்திகளையும்,

2) லூர்து, பத்திமா காட்சிகளையும், யாக்கோமே கொன்சாலசின் பசாம், ஒப்பாரிகளையும் விமர்சனம் செய்து, இவை தனியார் பக்தி நிலைகளெனவும் சுயநல சமூக மாற்றத்திற்கு ஒவ்வாத போக்குகள் எனவும் சாடுகிறார்.

3) நாம் வாழும் பல் இன மத கலாசார சூழலிலே ஏற்க வேண்டிய பல மத கலந்துரையாடலுக்கு வேண்டிய, தன் சிந்தனைக்கு ஏற்ற புதிய இறை
(4 ம் பக்கம் பார்க்க)

( 1ம் பக்கத் தொடர்)

**எருசலேமே.:.**

எதிர்த்து வண. டொன் பீற்றர் அடிகள் 'கத்தோலிக்க தூதன்' (Catholic Messenger) இதழில் விளக்கவுரை ஒன்றை அளித்திருந்தார்.

இன்று அமலமரித்தியாகி, திஸ்ஸா பாலசூரியா 'மரியாளும் மானிட விடுதலையும்' என்ற தம் நூலில் தேவதாயைப் பற்றிய நான்கு முக்கிய விசுவாச சத்தியங்களை கொச்சைப்படுத்தி எழுதியுள்ளார். மரியாள் பற்றிய இவ் விசுவாசப் பிரகடனங்கள், பாப்பரசர்களும் திருச்சங்கங்களும் விட்ட தவறுகள் என்றும் பிறமதங்களுடனான கருத்துறவாடலுக்கும், நவீன பெண் விடுதலை இலட்சியங்களுக்கும் இச்சத்தியங்கள் ஒவ்வாதவை என்றும் இவரது நூல் கூறுகிறது.

நம் பாப்பரசர் 2ம் அருள் சின்னப்பர் சர்வாதிகாரம், நவீனப்போர், சிசுக்கொலை, பொருள் நுகர்வாதம் முதலிய பல அநீதிகளுக்கெதிராக அடிக்கடி கண்டனக்குரல் கொடுத்து வருவதால் பாரிய எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளார். இவரைக் கொலை செய்ய பல சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரபலம் வாய்ந்த பாதாள உலகப் பின்னணியொன்றினால் அனுப்பப்பட்ட அலி அக்ஷா என்ற துருக்கியன் 1985 ல் பாப்பரசரைச் சுட்டுப் படுகாயப்படுத்தியதை நாம் அறிவோம்.

இத்தீவிலும் 1995 ல் பாப்பரசரின் வருகையை எதிர்த்து புத்த பிக்குகள் அனைவரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். அலோய் பீரிஸ் என்ற சிங்களக்குரு, ''பௌத்தர்கள் மனதை பாப்பரசர் புண்படுத்திவிட்டார். மன்னிப்புக் கோரல் விரும்பத்தக்கது'' என்றார்.

வரப்போகும் மிலேனியத்தில் (2000ம் ஆண்டிலும் தொடர்ந்தும்) பெருகப்போகும் அவவிசுவாச சூறாவளியில் எதிர்க்கப்படுபவர்களாக இவ்விரு சாட்சிகளும் விளங்குவர் என்பதை திருவெளிப்பாடு 11ம் அதி, 8 - 10 வசனங்களில் காணலாம்.

எனினும் இறுதிவெற்றி அவ்விருவருக்குமே என்கிறது திருமறை. ''மண்ணுலகை ஆளும் ஆண்டவர்முன் நிற்கும் இரண்டு ஒலிவ மரங்களும் இரண்டு விளக்குகளும் அவர்களே.'' (திரு 11:8)

இவர்களோடு இணைந்து நம் மண்ணுக்கு வாழ்வும், பிரகாசமும் அளிப்பவர்காக மாற, நாமும் அழைக்கப்படுகிறோம். ஆண்டவரால் எண்ணப்படும்படி எழுந்து நிற்போமாக. ''எருசலேமே எழுந்திரு.'' (இசையாஸ் 60:1)

# லூர்துபதியில் தேவதாயின் செய்தி
# செபம் - தபம் - செபமாலை

பிரான்ஸ் நாட்டின் தென்மேற்கில் ஸ்பெயின் நாட்டு எல்லையில் இரு மலைச் சிகரங்கட்கிடையில் அமைந்த நகரே லூர்து. இந்நகர் ஐரோப்பியமத்தியகால வரலாற்றில் ராணுவ ரீதியில் மிகமுக்கிய இடமாக விளங்கியது. லூர்த்துபதிக்குச் செல்பபர்கள் ஒரு மலைச் சிகரத்தில் உள்ள கோட்டையை அவதானிக்காமலிருக்க முடியாது.

சார்ளிமேன் என்ற பேரரசன் ஸ்பானிய நாட்டுப் படை எடுப்பின் பின், அன்று இஸ்லாமியர் கைவசமிருந்த லூர்தைச் சுற்றி வளைந்து முற்றுக்கையிட்டான். '' உணவின்றி சரணடைவர் '' என எண்ணினான்.

ஒரு நாள் ஒரு பெரிய கழுகு வானத்தில் பறந்து வட்டமிட்டு கோட்டைமீது ஒரு பெரிய மீனைப் போட்டது. மிராட் என்ற இஸ்லாமிய தளபதி அம் மீனை எடுத்து, சார்ளிமேனுடைய வீரர்கள் மீது எறிந்தான். கோட்டையில் போதியளவு உணவுண்டு என எண்ணிய சார்ளிமேன் முற்றுக்கையை தளர்த்தினான்.

பூ நாட்டின் ஆயர் 'தூர்ப்பின், பேரரசன் அனுமதியுடன் கோட்டைக்குச் சென்று சரண்புகு நிபந்தனைகளைப் பேசினார். தளபதி ஆயரின் வாக்கில் நம்பிக்கை வைத்து சரணடைந்தான். ஆயரால் ஞானதீட்சை அளிக்கப்பட்டு லோறுஸ் என நாமமிடப்பட்டான்' இப்பெயரையே தான் ஆண்ட அந்நகருக்கும் சூட்டினான். கால வழக்கில் அது 'லூர்து' என மாறியது.

இன்றும் லூர்து நகர முத்திரைச் சின்னத்தில் ( Court of arms ) மூன்று கோபுரம் கொண்ட கற்கோட்டையையும், மீன் ஒன்றைக் காலடியில் வைத்திருக்கும் சிறகு விரித்த கழுகையும் காணலாம்.

1858 பெப்ரவரி 11 முதல் யூலை 17 வரை இறைவனின் அன்னை லூர்துபதியில் பதினெட்டுத்தடவை தரிசனம் தந்தாள். செபம் செய்தல், செபமாலை ஓதுதல், பாவப் பரிகாரமாக தவமுயற்சிகளை அனுசரித்தல், பாவிகளுக்காக செபித்தல் முதலிய அறிவுரைகளுடன் தமது மாசில்லா உற்பவத்தையும் உறுதிப்படுத்தினாள்.

தேவதாய் ஜென்ம மாசின்றி உற்பவித்தவள், என்ற உண்மையை, திருச்சபையின் ஆரம்ப காலத்திலிருந்தே விசுவாசிகள் அனைவரும் ஏற்று வந்துள்ளனர். 1854 ல் ஒன்பதாம் பத்திநாத பாப்பிறை இதனை ஒரு விசுவாய சத்தியமாக பிரகடனம் செய்தார். வேத விரோதிகள் இதனை ஏளனம் செய்தனர். சில புத்தி ஜீவிகள் குற்றச் சாட்டுகளைச் சுமத்தினர்.

ஆயின் நாலு ஆண்டுகளின் பின், மரியாளுக்கு மங்கள வார்த்தை சொல்லப்பட்ட திருநாளன்று (1858-3-25) தமது 16 வது காட்சியில் தமது பெயரை, மரியன்னை ''நாமே அமல உற்பவம்'' எனத் திருவாய் மலர்ந்தார். இதன் மூலம் பாப்பரசரின் வழுவா வரமும் அவர் பிரகடனம் செய்த அன்னையின் அமல உற்பவ சத்தியமும் பரலோகத்தால் உறுதிப்படுத்தப்பட்டது.

இறைவன் தமது மகத்தான செயல்களை நிறைவேற்ற பலவீனமானவர்களையே தெரிந்து கொள்கிறார். (1கொரி 1:27) தேவதாயின் மூலம் தூதுரைப் பவளாக லூர்துபதியில் தெரியப்பட்டவள் ஏழ்மையும், ஈழை நோயுங் கொண்ட கல்வியறிவற்ற 14 வயதுச் சிறுமி பெர்ணதேத் என்பவளே.

வானின் தேவதையின் தரிசனம் அவள் வாழ்வையே மாற்றிவிட்டது. ஒன்றும் அறியாப் பேதையாக இருந்தவள், வீர மங்கையாக மாறி அன்னையின் அறிவுரைகளை அஞ்சா நெஞ்சுடன் அறிவித்தாள்.

லூர்து நூற்றாண்டு விழா பற்றி 1957-7-20 ல் தாம் விடுத்த திருமடலில், பாப்பிறை 12ம் பத்திநாதர், ''நாம் செபதபங்களால் புணருத்தாரணம் பெறுதல் வேண்டும் என்பதை அறிவுறுத்தவே அன்னை லூர்துபதியில் தரிசனம் தந்தாள்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

லூர்துபதியில் பெர்ணதேத் தன் விரல்களால் தோண்டிய நீரூற்று இன்று முப்பதாயிரம் கலன் நீரைத் தினமும் சுரந்து கொண்டிருக்கிறது. இவ்வற்புத நீரூற்றைக் குடித்தும், உடல் குளித்தும், தம் உடல் உள நோய்களிலிருந்து குணப்பட்டோர் ஏராளம் ஏராளம். ஆயின் அன்னை வழியாக ஆண்டவர் இயேசு பொழியும் அருள்வள ஊற்றை நாம் பருகினால், நம் ஆன்மா குணமடையும். வலுவடையும். ( அரு 4:13-14)

''உன்னை இவ்வுலகில் அல்ல. மறுவுலகிலேயே பாக்கியவதி ஆக்குவேன்'' என பெர்ணதேத்துக்கு கூறிய வார்த்தைகளால் ( 3 ம் பக்கம் பார்க்க )

# தேவதாயின் அற்புத வரலாறு

நற்செய்தி ஏடுகளில் தேவதாய் பற்றி விடப்பட்டிருக்கும் மௌன இடைவெளிகளை நிரப்ப, தனது புலனறிவினாலும், மார்க்ஸிய நவீன பெண் விடுதலைச் சிந்தனை, ஊக்குவித்த ரூபிகரத்தினாலுமே, தேவதாய் பற்றிய தனது நூல் உருவாகியது என்கிறார் திஸ்ஸா பாலசூரியா. தேவதாயைப்பற்றி அறிய அவர் உண்மையாகவே ஆராய்ந்திருக்க வேண்டியது அகிராடாமேரி, லூயிஸ் தே மொன்பேர்த் ஆகியோரின் தேவதாய் பற்றிய கிறிஸ்தவ ஆழ்நிலை பரவச தியான வரலாறுகளையே, தேவதாயின் மாசில்லாத உற்பவமும், அர்ச். அன்னம்மாள் திரு உதரத்தில் அவள் செய்த அற்புதமானசெய்கைகளும் வருமாறு:

தேவமாதா சம்மனசுக்களுக்கு இராக்கினியாக வேண்டியதால் சம்மனசுக்களை உண்டுபண்ணின ஞாயிற்றுக்கிழமையில்தானே சம்பூரணமாக அவளுடைய திருச்சரீரஞ் செய்யப்பட்டது. அடுத்தாப்போல் வரும் சனிக்கிழமையிலே கடவுளானவர் அச்சரீரத்துக்குள் நரர் நாவுக்கெட்டாவலங்கிர்த ஆச்சரியமுள்ள ஓர் ஆத்துமத்தைச் செய்து அதில் விட்டார். (இந்நிமித்தஞ் சனிக்கிழமை தேவமாதாவுக்கான நாளாக ஒதுக்கப்பட்டது. ஞான வரப்பிரசாதங்களினாலும் தூய வரங்களினாலும் நிறைந்த அவ் ஆத்துமத்தை சரீரத்திற் புகுர விடும்போது பரம திரித்துவம் சொன்னதாவது நமக்குச் சாயலாகவும் இணையாகவும் மனிதனைச் செய்வோம் என்றார். கொஞ்ச நேரம் பொறுத்து இம்மாத்திரம் ஆச்சரியமான வஸ்துவின் பேரிலே தமக் கிருக்கிற சந்தோஷத்தைக் காண்பிக்கிறதற்காக மெத்த நேர்த்தியாயிருக்கின்றதென்றார். அக்கணத்திலே அன்னம்மாள் மனமறிய ஆச்சரியமானதுமாய் அவளோடு தங்கினதுமான தேவ வரங்களைப் பெற்றதினால் ஆனந்த நிஷ்டையில் பிரவேசித்து தெய்வத்துக்குட் புகுந்தாப்போல பேரின்பப் பரவசமானாள். இத் திருப்பொருளைத் தமது பரிசுத்த வயிற்றில் தாங்கியிருந்த நாட்களிலே மோட்சானந்தத்தில் இருக்கிறது போல் இருந்தாள். வயிற்றிலிருந்த திருக்குழந்தை பூரண அறிவோடு சகல இலட்சணங்களையும் அர்ச்சிஷ்டவர்களுடைய திரள் கொண்டதற்கு அதிகமான அருள் யோகங்களையும் கொண்டிருந்தமையால் அவ் வயிற்றிலிருந்து கொண்டே தன்னை உண்டுபண்ணின தேவனுக்கு நாளும் பொருந்திய நமஸ்காரங்களைச் செய்து கொண்டு வந்தாள். ஆரம்பத்திலே தேவ சம்பந்தமான விசுவாசம் நம்பிக்கை, தேவ சினேகம் என்கின்ற புண்ணியங்களைச் செய்து கொண்டு வந்தாள்' உன்னத நன்மையாகிய சுவாமியினுடைய அழகைக் கண்டு உள்ளம் பூரித்து பக்திமயமான அன்பைப் பார்க்க அதிக சோபனம் பொருந்திய பட்சத்தோடு சுவாமியைச் சிநேகித்தாள். சுவாமி எப்படி இருக்கிறாரோ அப்படியே அறிந்திருந்தாள். தமக்குச் செய்த நாவுக்கெட்டா உபகாரங்களுக்காக நன்றியறிந்த நமஸ்காரம் செய்து கொண்டு வந்தாள். வயிற்றிலிருக்கும் போதே கடவுள் சம்மனசுக்களைச் சிருஷ்டித்ததையும், அவைகளில் சிலதும் ஆதிமனிதனாகிய ஆதாமும் விழுந்து போனதையும் அவர்கள் கொண்ட பாரமான துக்க வில்லங்கங்களையும் பாதாளஸ்தலங்களாகிய உத்தரிப்பிஸ்தலம், பிதாப்பிதாக்கள் ஸ்தலம் நரக ஸ்தலம் இதுகளிலடங்கிய சமஸ்த வஸ்துக்களையுந் தீர்க்கமாய் அறிந்திருந்தாள். அன்றியும் சகல மனிதர்களையும் சகல சம்மனசுக்களையும் இவைகளின் கிரமங்களையும் கிரியைகளையும் மற்ற வஸ்துக்களையும் அவைகளின் குணா குணங்களையும் அவள் கண்டிருந்தாள். மேலும் பிதாப்பிதாக்களுடைய பண்டைய குடும்பங்களும் தீர்க்கதரிசிகள் கொண்ட வரங்களும் அவளுக்குத் தெரிந்திருந்தன. ஆதி மனிதனாகிய ஆதாம் கெட்டதை நினைத்து அவள் மனங்கலங்கி சொரிந்த கண்ணீர்களைப் பிராயச்சித்தக் கண்ணீர்களாக சுவாமி ஏற்றுக்கொண்டார். தான் சுவாமியினிடமாகப் பார்க்கிற தன் தந்தை தாயாருக்காக வேண்டிக்கொண்டாள். வயிற்றிலிருக்கும் போது மூன்று முறை பரம திரித்துவத்தினுடைய காட்சியைக் கண்டாள். ஆத்துமம் சிருஷ்டிக்கப்பட்டபோது ஒரு முறையும் ஒன்பதாம் மாதத்தில் ஒரு முறையும் தான் பிறக்கு முந்தின நாளிலொரு முறையும் ஆக மூன்று முறையாகும். மனுக்குலம் ஈடேறுவதற்காக வேண்டிக் கொள்ளுவாள். தாம் உலகத்திற் பிறந்து அற்பமாகிலுஞ் சுவாமிக்கு விரோதம் செய்கிறதாயிருந்தால் தாம் வயிற்றிலேயே மரிக்கவேண்டிக் கொண்டாள். அந்தக் கணத்திலேயே பூமியிலிறங்கும்படி தேவதிருவுளம் உண்டாயிற்று. அர்ச். அன்னம்மாளிடத்தில் வெளிப்படையாய் நடக்கும் அற்புதமான கிரியைகளைப் பசாசு கண்டு தன் தலையை நசுக்கும் ஸ்திரீயானவள் இவள் வயிற்றில் இருக்கலாம் என்று நினைத்து இவளுக்கு இம்சை பொருந்திய தந்திரங்களைப் பண்ணினதுமன்றி இவளைக் கொல்ல வீட்டை இடிக்கப் போகின்றபோது சம்மனசுக்கள் அதை இடிக்கக் கூடாதென்று நிறுத்தினார்கள். சில வாய்ப்பட்டியான பெண்பிள்ளைகளை ஏவி அவள் பேரில் கொடுமையான தூஷணங்களைக் கொட்டும்படியாய்ச் செய்தன. வரப்பிரசாதங்களால் அலங்கரிக்கப்பட்ட பரிசுத்த அன்னம்மாள் விசுவாசத்தில் நிலைகொண்டு அசையாத பர்வதத்தைப்போல் நின்றாள்.

(வளரும்)

---

(2ம் பக்கத் தொடர்)

**லூர்து...**

இவ்வுலகு நம் சொந்த நாடல்ல. இது சோதனைத்தளம். இங்கு புடமிடப்பட்ட பின், மறுவுலகிலேயே நிலையான பேரின்பம் கிடைக்கும் என அன்னை எடுத்துரைக்கிறாள்,

பாவிகட்காய் செபிக்குமாறு அன்னை கூறியதன் மூலம் பிறர் சிநேகமெனும் புண்ணியத்தை எடுத்தோதுகின்றாள்.

தபத்தின் அவசியத்தை தன் சொல்லாலும் உடையாலும் வலியுறுத்திய அன்னை, தபத்தின் அடையாளமாக தரையை முத்தமிடுமாறு பெர்ணதேத்துக்குக் கூறினாள். எல்லோரும் மிதித்து நடக்கும் தரையை உடல் வளைந்து, தலைகுனிந்து, வாயால் முத்தமிடுவது மிகவும் கடினமான, இழிவான, நம் உள்ளத்துக்கு ஒவ்வாத ஒரு செயல். நமது இச்சைகளை கட்டுப்படுத்தி, ஐம்புலன்களை அடக்கி ஆண்டு நடக்கையில் தபம் செய்தவர்களாகிறோம்.

பாவங்கட்கு மன்னிப்பு பெறுவது மட்டும் போதாது. பரிகாரமும் செய்ய வேண்டும். அதற்குச் சிறந்த வழி தபம். நம் துரோகங்கட்காக மட்டுமல்ல, மற்றவர்களின் பாவக்கிரமங்கட்காகவும் நாம் தபம் செய்ய வேண்டும். லூர்து அன்னை நம்மிடம் எதிர்பார்ப்பதும் அதுதான்.

லூர்தில் தேவதாயின் காட்சிபெற்ற பெர்ணதேத் தன் இறுதிக் காலத்தை ஒரு கன்னிகையாக நெவர்ஸ் என்னுமிடத்தில் கழித்தாள். கட்டுப்பாடு நிரம்பிய செபதப வாழ்வை மேற்கொண்டாள் 'விளக்குமாற்றை உபயோகித்தபின் ஒரு மூலையில் போடுவார்கள், அன்னையின் தூதுரைக்கும் என்பணி முடிந்தது. ஆண்டவன் சித்தப்படி இங்கு முடங்கிக் கிடக்கிறேன்.'' என்று கூறிய பெர்ணதேத்தின் தாழ்மை, எளிமை, கீழ்ப்படிவு, பொறுமை ஆகிய கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கிணங்கி நடந்து ஆண்டவன் இயேசுவை அறிந்து அன்பு செய்து, அறிவித்து 2000ம் யூபிலி ஆண்டை வரவேற்போம்.

( 1 ம் பக்கத் தொடர் )

**திஸ்ஸா...**

இயல் அளவுகோல்களை முன் வைக்கிறார்; • மனித அறிவு அளவுகோல்களுக்கு உட்பட்டு திருப்தி அளிப்பது; • ஏனைய சமய சிந்தனை அடித்தளவாதத்திற்கு முரண்படாதது; • மானிட முன்னேற்றத்துக்கும் விடுதலைக்கும் உதவுவது; மேற்கூறப்பட்டவற்றிற்கு ஒவ்வாதவை நிராகரிக்கப்படல் வேண்டும் என்கிறார்.

4) சென்மபாவம் பற்றிய திருச்சபையின் படிப்பனைகள் இவரால் ஏற்கப்படவில்லை.

5, 6, 7) தேவதாய்பற்றி 431 ம் ஆண்டு எபேசின் திருச்சங்கம் தொட்டு 1950 ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட, முழுத் திருச்சபையும் கொண்டாடும்.

அ) இறை அன்னை (தை 1)

ஆ) மாசில்லா உற்பவம் (மார்கழி 8)

இ) மோட்ச ஆரோபணம் (ஆவணி 15)

ஈ) முப்பொழுதும் கன்னி, என்ற சத்தியங்களை • தன் வாதத்திற்கு முட்டுக் கட்டை என விலக்கி வைத்தார்.

இதற்கு உறுதுணையாய் நின்ற திருச்சபையின் ஆசிரியத்தகமை, கிறிஸ்து இயல் உண்மைகளையும் கொச்சைப் படுத்தினார்.

இந்நூலுக்கு எழுந்த எதிர்ப்புகள், ஆயர் அவையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. 1993 தை 7 ல் ஆயர் அவையினர் திஸ்ஸா பாலசூரியரை அழைத்து, உத்தியோகபூர்வமாக நூலின் குறைகளை எடுத்துக்காட்டினர். அவர் அதே ஆண்டு பங்குனி 30 இலும் ஆனி 12 இலும் ஆயர்களுக்குதிருப்தியற்ற விடைகளை எழுத்து வடிவத்தில் அனுப்பினார்.

தொடர்ந்து ஏனைய முயற்சிகளையும் அவர் அசட்டை செய்தார். அவரது துறவற சபையான 'அமலமரித்தியாகிகளின்' அசமத்த நிலையும் 3 வருடங்கள் பொறுப்பற்ற ஓர் நிலைப்பாட்டுக்கு உதவின. கத்தோலிக்க இறையியல் வாதிகளெனத் தங்களை கருதிக் கொள்ளும் வேறு சிலரும் அவருக்கு இரகசிய ஒத்துழைப்பு நல்கினர்.

இவர் நடத்திவந்த சமூக சமய நடுநிலையத்தில் ஒத்துழைப்பு தந்த சில மார்க்ஸிய சிந்தனைவாதிகள், இவருக்காக பல ஆங்கிலப் பத்திரிகைகளில் கடிதங்கள் கட்டுரைகள் எழுதி, கடந்த மூன்று வருட இடைவேளையில் திருச்சபைக்கு எதிராக சொற்போர் தொடுத்தனர்.

இவரது நவீனமயப்படுத்தப்பட்ட அச்சகத்திலிருந்து இது சம்பந்தமான நூல்கள், சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. இறையியல், திருச்சபையியலைத் தவிர்த்து, மார்க்ஸியப் பார்வையில் இலங்கை அரசியல், பொருளாதாரம், மக்கள் உரிமைகள், கிராமிய முன்னேற்றம், தொழிலாளர் பிரச்சனைகள், மூன்றாம் மண்டல நாடுகளும் மேற்கத்திய சுரண்டலும், போரும் ஆயுத விற்பனையும் முதலிய தலைப்புகளில் பிரசுரங்கள் வெளியாகின.

ஆயர்கள் பணிவாக இவரை அழைத்து, ''நீர் பொருளாதாரத் துறையில் நிபுணர் அதுபற்றி ஆய்வு செய்து எழுதும் இறை இயல் துறையில் பயிற்றப்படாத நீர் அத்துறைக்குள் புகுவது, சாத்தியமாக எமக்குப் படவில்லை '' என அன்புடன் எச்சரித்தனர். மேலும் இவரின் இறை இயற் கருத்துக்களை எடை போட, இறை இயற் கலாநிதிகள் டல்ஸ்ரன் போப்ஸ், இம்மானுவேல் பெர்னான்டோ முதலியோரின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்பே, பாலசூரியாவின் மீதான தீர்ப்பை வெளிப்படுத்தினர்.

திஸ்ஸ பாலசூரியா, 500 வருட கால, சிங்கள கத்தோலிக்க தேவமாதா பக்தி இலக்கியங்கள், பாடல்கள், மந்திரங்கள், யந்திரங்கள் முதலியவற்றை பக்க சார்புடன் அணுகி, இன்றைய மனித துன்பதுயருக்கு ஒவ்வாத பால் வடியும் முகத்தாள், அடிமை விலங்கறுக்கத் தூண்டாத தாய் வடிவம், இது விடுதலைக்குப் போரிடத் தூண்டாது என்றும், இது கெஞ்ச வைக்கும் தேவதை, இது வேண்டாம் என்றும், திருமறை மரியாளைப் பற்றி பெரும் மௌன இடைவெளிகளைக் கொண்டுள்ளது என்றும், இந்த வெற்றிடத்தை நிரப்ப, நவீன பெண் விடுதலை, புரட்சிவாதம், பொதுவுடமைப் பார்வையில் தன் ரூபிகர சிந்தனையைப் பாவிக்க உறுதி கொண்டு, தேவதாயை, வெறும் தொழிலாளியின் மனைவி, கொதித்தெழும் அடிமை வர்க்கப் பெண், ரோமைய சாம்ராச்சியத்துக்கு எதிராக வெடிக்கப்போகும் யூதப்புரட்சி மங்கையாக விபரிக்கின்றார். இப்புரட்சிகர தரிசனத்துக்கெதிராக, தேவதாய் பற்றிய வேதசத்தியப் பிரகடனங்கள் குறுக்கிடுகின்றன என்பதுடன் இதற்கு உதவும் வேறுமறை உண்மைகளையும் கொச்சைப்படுத்துகிறார்.

திஸ்ஸா பாலசூரியாவின் ''இலங்கையில் தேவதாய் வணக்கம்'' பற்றிய கூற்று மெய்யாயின், வடக்கிலும் தெற்கிலும் காணப்படும் 'வியாகுலமாதா பக்திக்கு' விளக்கம் தர முடியாது. 18 ம் நூற்றாண்டின் கொலரா அவல மரணங்கள் தொட்டு 20 ம் நூற்றாண்டின் இனப்போர்க்கொலைகள் வரை, தாய்மாரும் இளைஞரும் தம்மை வியாகுலத் தாயோடும் மடிமீது கிடக்கும் மகனோடுமே இணைத்து, வேண்டுதல் செய்து, துன்பத்தில் ஆறுதலும் ஆதரவும் மட்டுமல்ல, புதிய வாழ்வுக்கான அர்த்தம் பெறுவதையும் நாளாந்த அனுபவங்களாகக் காணும் எமக்கு, ''மக்கள் இன்னல்களில் தொடர்பு இல்லாத மாதா'' என்ற இவர்கள் கூற்றுக்கள், பரிதாபத்துக்குரிய பொய்மைகளாகின்றன.

அத்துடன் ஏனைய மதங்களுடனான உரையாடலுக்கும், மரியாள் முட்டுக்கட்டை ஆகலாம் என ஐயமுறுகிறார். இலங்கை ஒரு பௌத்தநாடு, பௌத்தம் கடவுள் அற்ற மதம். அதில் இரட்சகர்கள் தேவையில்லை. அப்படியானால் இரட்சகிகட்கும் அறவே இடமில்லை என்கிறார்.

ஆனால் இரட்சகர் தேவையை உணர்ந்ததனாலேயே பௌத்தம் கி. மு. 2 ம் நூற்றாண்டிலேயே பிளவுபட்டு, மகாயான பௌத்தம் பிறந்து, உலகளாவப் பரவியிருக்கிறது. கொள்கை அளவில் மகாயானத்துக்கு இங்கு இடமில்லை எனினும் 'தாரா' என்ற பெண் புத்த தேவதை வணக்கம், அதன் பின்னணியில் கஜபாகு மன்னன் கொணர்ந்த பத்தினித் தேவதை (கண்ணகி) வழிபாடு பல சிங்கள பௌத்த கிராமங்களில் நிரந்தர இடத்தைப் பற்றிவிட்டதே. மாதா பக்தி அன்றும் இன்றும், கத்தோலிக்கர் தம் பிறசமய நண்பர்களுடன் உரையாடட்டுமல்ல, உறவாடவும் தடையாயிருந்ததில்லை.

2 ம் வத்திக்கான் சங்கம் ஊக்குவித்த கிறிஸ்தவ ஒன்றிப்பு, பிற மதங்களுடனான உரையாடல், இவற்றுக்கான திருச்சபையின் வழிகாட்டுதல்கள், சர்வதேச – ஆசிய பிராந்திய செயலகங்களை புறக்கணித்துவிட்டு வேறு பிறசமய தத்துவங்களில் மேலை நாட்டுக் கலாநிதிப் பட்டங்களுடன் ஆய்வுகள் செய்து, அம்மதங்களின் அனுபூதி நிலை கிட்டாது. கிறிஸ்தவத்தின் அனுபூதி மணம் நுகராத சிலர் இங்குமங்கும் (இரண்டுமற்ற மேற்கத்தியர்களிடையே) தம்மை புதுவித ஆசிய புத்திஜீவிகள் – ஆன்மீகவாதிகள் என்று காட்டிக்கொள்பவர்கள் வட்டம் இன்று பரவலாகக் காணப்படுகிறது. இப்படிப்பட்ட கொழும்புத் தலைநகர் சார் வட்டத்தின் பிரதிநிதியே இந்நூலின் ஆசிரியர்.

இந் நூற்றாண்டின் அவவிசுவாச சூறாவளியில் ஆன்மீக கர்வம் மிக்க, தாம் இழைக்கும் தீமையை நன்குணராது, வெளியார் நிதியுதவியுடன் திருச்சபையின் அந்தஸ்து, கௌரவம் செல்வாக்கு என்பவற்றை துஷ்பிரயோகம் செய்து திருச்சபைக்கு, இறை அரசுக்கு தீங்கிழைக்கும் இக் கூட்டத்தை, தேவதாயின் அறிவுரைகள், தீர்க்க தரிசனங்கள், பாப்பிறையின் அறைகூவல்களைக் கொண்டு, இனங்கண்டு, கலக்கமுறாது விழிப்புணர்வுடன் இறை அரசுக்குழைப்போம். தேவதாய் இவர்களைக் குதிக் காலால் மிதிப்பாள்.

அருள்திரு ஸ்ரேவான் கோபிக்கு தேவதாய் கூறிய வார்த்தைகள் எவ்வளவு உண்மை.

''பரிதாபத்துக்குரிய இத்த எனது குருமகன்களே பெரியவேத மறுதலிப்பு தொடங்குவதற்கு பொறுப்பாயிருப்பார்கள்.''

''எனக்கு பிரமாணிக்கமாயிருக்கும் குருக்களே நீங்களனைவரும் விழிப்புடனிருந்து செபியுங்கள்''

Print: Annai Printers, Jaffna.
Published by PAX CHRISTI,
St. JOSEPHS ASHRAM,
102, Main st, Jaffna.